**கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழும் - 2022**

-----------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் (“ஆணைக்குழு) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**விடயத்தை வலியுறுத்துதல்**

நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 2.3.3 இன் மீது நான் கவனத்தை ஈர்க்கின்றேன. இது ஆணைக்குழு மீதான வருமான வரியின் பிரயோகம் தொடர்பாக ஆணைக்குழுவின் நிலைமை தொடர்பில் கலந்துரையாடப்படுகிறது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் ஆணைக்குழு இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்காய்விற்கு ஆவணச்சான்று சமர்ப்பிக்கப்படாமை

எழுத்துமூல தகவல் தொடர்பு மற்றும் பல நினைவூட்டல்கள் இருந்தபோதிலும், பின்வரும் ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | உருப்படி | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | சமூக விதிகள் | இல்லை | சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட | கூட்டங்களின் போது, சம்பந்தப்பட்ட | கணக்காய்விற்கு தேவையான தகவல்களை |

| | | | |
|---|---|---|---|
| | சமூக விதிகளின் பட்டியல் | அனைத்து தகவல்களையும் ஆவணங்களையும் பகிர்ந்து கொண்டுள்ளோம். | வழங்குவதற்கு முகாமைத்துவம் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 18,333,220 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ஏழு (07) மாதங்களின் (2021 மே 27 முதல் திசெம்பர் 31 வரை) மிகை ரூபா 8,862,744 ஆகும். ஆகையால் நிதி விளைவில் ரூபா 27,195,964 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான நிர்வாக செலவினம் ரூபா 224,125,512 ஆல் அதிகரித்தமையே இவ் வீழ்ச்சிக்கான காரணமாகும்.

### 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டின் ஏழு மாதங்களுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் பின்வருமாறுள்ளது.

| **வரிசை உருப்படி** | **2022** | **2021 மே 27 முதல் திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதி** | **வேறுபாடு** | **வேறுபாடு** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **%** |
| வருமான வளங்கள் | 245,413,217 | 48,771,584 | 196,641,633 | 403% |
| நிர்வாக செலவினங்கள் | 262,294,418 | 38,168,906 | 224,125,512 | 587% |
| விளம்பர மற்றும் சந்தைப்படுத்தல் செலவினங்கள் | 1,250,637 | 1,582,192 | 331,555 | 21% |
| நிதி செலவினங்கள் | 201,382 | 157,742 | 43,640 | 28% |
| ஆண்டுக்கான மிகை/ (பற்றாக்குறை). | (18,333,220) | 8,862,744 | 27,195,964 | 307% |

### 2.3 நிதிப் பகுப்பாய்வு

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவின் தொழிற்படு மூலதன முகாமைத்துவம் ஆணைக்குழுவுடன் தொடர்புடைய நிலையான மேந்தலை கிரயம் 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு செய்யப்படாத நிதிக்கூற்றுக்களில் உள்ள முக்கிய கிரயக் கூறுகளைக் கருத்தில் கொள்ளும்போது ஆண்டுக்கு ஏறத்தாழ ரூபா 136 மில்லியன் ஆகும். துறைமுக நகரத்தின் செயற்பாடுகளின் மெதுவான செயற்பாட்டுத் திறன் காரணமாக ஆணைக்குழுவின் வருமானமீட்டல் அதன் வணிக நடவடிக்கைகளின் மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, நியாயமான அளவில் | கொழும்பு துறைமுக நகரத்துக்கான முதலீடுகள் மந்தகதியில் காணப்படுவதற்கு பிரதானமாக நிலவும் நாட்டின் நிலைமையே காரணமாகும். ஸ்திரத்தன்மை தொடர்ந்து மேம்படுவதால், வர்த்தகங்களும் அதிகரிக்கும் என்பதும், அதன் மூலம் கொழும்பு துறைமுக நகருக்கு வெளிநாட்டு நேரடி | நாளாந்த நிதிக் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு போதுமான தொழிற்படு மூலதனம் இருப்பதை முகாமைத்துவம் உறுதிப்படுத்த வேண்டும். |

உத்தரவாதம் அளிக்கப்பட்ட நிதி ஆணைக்குழுவிற்கு வரவில்லை என்றால், நாளாந்த நிதிக் கடப்பாடுகளைச் சந்திப்பது கேள்விக்குரியதாக இருக்கலாம். மேலும், ஆணைக்குழு மாதங்களின் எண்ணிக்கையைக் கணிப்பிட்டது, 2023 மார்ச் மாதத்தில் உள்ளவாறு மீதமுள்ள நிதியுடன் ஆணைக்குழு இயங்கலாம். மேலும் இது ரூபா 12,561,620 மதிப்பிடப்பட்ட மாதாந்த burnout தொகையுடன் 8.5 மாதங்கள் என கணிப்பிடப்பட்டது, ஆணைக்குழுவின் முக்கிய கிரய கூறுகள் பின்வருமாறுள்ளன.

| **முக்கிய கிரய கூறுகள்** | **2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கிரயம் (ரூபா. 000)** |
|---|---|
| கணக்கீட்டு கட்டணம் | 3,742 |
| அலுவலக வாடகை | 27,168 |
| சம்பளம் ஊதியங்கள் மற்றும் தனிப்பட்ட செலவினங்கள் | 105,079 |
| மொத்தம் | 135,989 |

முதலீடுகள் வரும் என்பதும் எதிர்பார்ப்பாகும். கூடுதலாக, முதலீட்டாளருக்கு முக்கியமான வங்கி விதிமுறைகளை வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதம், எதிர்பார்க்கப்படும் முதலீடுகளின் உட்பாய்ச்சல் தாமதத்திற்கு பங்களித்தது. இந்த விதிமுறைகள் தற்போது இலங்கை மத்திய வங்கியில் இறுதி செய்யப்பட்டுள்ளதுடன், விரைவில் வெளியிடப்படும். இது நிலுவையில் உள்ள சில திட்டமிட்ட முதலீடுகளைத் தொடங்கும். மேலும், செயற்பாட்டிற்கான நிதி தேவையை பூர்த்தி செய்வதற்காக செயற்திட்ட கம்பனியிடம் இருந்து இலங்கை ரூபா 200 மில்லியன் வட்டியில்லா முற்பணத்தை ஆணைக்குழு பெற்றுள்ளதுடன் அதிகரித்த கட்டணங்களுடன் திருத்தப்பட்ட கட்டண ஒழுங்குமுறை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்படும், அங்கு போதுமான நிதி உட்பாய்ச்சல் எதிர்பார்க்கப்படுகிறது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் தற்காலிக உரிமங்கள்

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2021 இன் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் (சட்டம்) 65(1) ஆம் பிரிவின் பிரகாரம், சட்டத்தின் ஆரம்ப திகதி முதல் கொழும்பு துறைமுக நகர பகுதியை உள்ளடக்கிய அனைத்து | இந்த விடயம் பாராளுமன்றத்தில் பலமுறை கலந்துரையாடப்பட்டிருந்தது. தங்கள் குழுவிற்கு அனைத்து ஆவணங்களும் கிடைக்கப்பெற்றன. எனினும், அவர்களது ஒப்பந்த காலம் முடியும் வரை | ஆணைக்குழு சட்டத்தின் குறிப்பிட்ட பிரிவைக் கடைப்பிடிக்க வேண்டும். |

காணிகளும் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படும். எனவே, இந்தப் பகுதியில் ஏதேனும் ஒரு பகுதி ஆக்கிரமிக்கப்பட்டிருந்தால், அது இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் இருக்க வேண்டும். எனினும், கொழும்பு துறைமுக நகரப் பகுதிக்குள் ஐந்து (05) ஆண்டு காலத்திற்கு ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் ("ஆணைக்குழு") இணக்கப்பாடின்றி பதினொரு (11) தற்காலிக உரிமங்கள் செயற்திட்ட கம்பனியால் (சீனா துறைமுகம் மற்றும் பொறியியல் கம்பனி - CHEC) வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சட்டம் இயற்றப்பட்ட பின்னர் ஒன்பது (09) உரிமங்கள் வழங்கப்பட்டிருந்தமையும் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த வணிகங்கள் அனைத்தும் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டிய கடற்கரை, பூங்காவில் அமைந்துள்ளமையும் அவதானிக்கப்பட்டது. எனினும், அந்த உரிமங்களை வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை செயற்திட்ட கம்பனி மாத்திரமே அனுபவித்தமையும், இலங்கை அரசாங்கத்திற்கு எந்தவொரு வருமான நன்மையும் வழங்கப்படாதமையும் அவதானிக்கப்பட்டது. எனினும், அத்தகைய வணிகங்களின் நிதி நன்மைகள் செயற்திட்ட கம்பனிக்கு முத்தரப்பு உடன்படிக்கை அல்லது சட்டத்தின் ஏற்பாடுகள் மூலம் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த உரிமங்களை வழங்குவதன் மூலம் செயற்திட்ட கம்பனியால் உருவாக்கப்பட்ட வருமானம், எழுத்துமூல கோரிக்கை மற்றும் பல எழுத்துமூல நினைவூட்டல்கள் இருந்தபோதிலும் கணக்காய்விற்கு கிடைக்கவில்லை.

செயற்பாட்டாளர்கள் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றமையே தற்போதைய நிலையாகும். சட்டமா அதிபர் அலுவலகம் மற்றும் அமைச்சு பதில்களை வழங்கியுள்ளதுடன் பொது நிதி தொடர்பான குழுவின் செயலாளருடனான கடிதப் பரிமாற்றம் (பின்னிணைப்பு V) இல் கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) 2021 இன் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் பிரகாரம் கொழும்பு துறைமுக நகரத்தின் அதிகாரப் பகுதியிலும் அதிலிருந்தும் இந்தச் சட்டத்தின் படி அங்கீகரிக்கப்பட்ட நபரைத் தவிர வேறு ஒருவர் வணிகத்தில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார். எனவே, சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நபர்களாக பதிவு செய்யாமல் அந்த உரிமங்கள் வழங்கப்பட்டிருந்ததால் தற்காலிக உரிமங்களை வழங்குவது சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணானது என்பது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் கம்பனிகளுக்கு 11 தற்காலிக உரிமங்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 3.2 விளம்பர நடவடிக்கைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு துறைமுக நகரத்தின் பிரதான திட்டத்தின் பிரகாரம், இலங்கை அரசாங்கத்திற்கு 62.1 ஹெக்டெயர் சந்தைக்குக் கிடைக்கக்கூடிய காணி பகுதி, நாட்டிற்கு பொருளாதார நன்மைகளை வழங்குவதற்காக சந்தைப்படுத்தப்பட வேண்டும். சீனா துறைமுகம் மற்றும் பொறியியல் கம்பனி (CHEC) 116.2 ஹெக்டெயர் ஏனைய சந்தைப்படுத்தக்கூடிய காணிப்பகுதியை குத்தகைக்கு விடுவதற்கு உரிமையுள்ளது. மேலும், கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவுடன் ஒப்பிடும் போது CHEC சந்தைப்படுத்தல் மூலோபாயத்தைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனவே, சந்தைப்படுத்தக்கூடிய காணியை குத்தகைக்கு விடுவது தொடர்பாக கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவிற்கும் CHEC துறைமுக நகரத்திற்கும் இடையில் பரஸ்பர உடன்படிக்கை செய்யப்பட்ட திட்டம் இடம்பெற்றிருந்தால் இரு தரப்பினருக்கும் அதிக நன்மை | இது முறையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது, மேலும் ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தலின் முக்கியத்துவத்தை ஆணைக்குழு அறிந்திருக்கிறது. எனினும், அரசாங்கம் சந்தைப்படுத்தக்கூடிய காணிகளில் உள்ள பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் வைத்தியசாலை போன்ற சமூக உட்கட்டமைப்புக்கான 10 செயற்திட்டங்களைத் தவிர, 6 CHEC சந்தைப்படுத்தக்கூடிய காணிகளின் விகிதத்தில் அரசாங்கம் சந்தைப்படுத்தக்கூடிய காணியை பணமாக்குவதற்கு முன்னர் பணமாக்கப்பட வேண்டும் என்பது தெளிவான ஒரு புரிதலாகும். எனவே, அரசாங்கம் சந்தைப்படுத்தக்கூடிய | இலங்கை அரசாங்கத்திற்குக் கிடைக்கும் சந்தைப்படுத்தக்கூடிய காணிப் பகுதியை சந்தைப்படுத்துவதற்கான கூட்டு முயற்சியில் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| பயக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. எனவே, முதலீட்டாளர்களைக் கண்டறிவதற்கான ஒருங்கிணைந்த முயற்சி இலங்கைக்கு மிகவும் வினைத்திறனாகவும் சாதகமாகவும் இருக்கும். மேலும், அத்தகைய நடவடிக்கை சந்தைப்படுத்தக்கூடிய காணிகளின் சந்தைப்படுத்துதலுடன் தொடர்புடைய அபாயத்தைக் குறைக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. | காணிகளை பணமாக்குவதற்கான திறன் இந்த ஏற்பாட்டிற்கு உட்பட்டது. | |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**3.3.1 ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் நியமனம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 இன் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் 24(4) ஆம் பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் அனைத்து விடயங்களுக்கும் பணிப்பாளர் நாயகம் (DG) பொறுப்பேற்க வேண்டும். மேலும் சட்டத்தின் 25(ஆ) பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் நாளாந்த முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தை DG மேற்கொள்வார். எனினும், ஆணைக்குழுவின் ஆரம்பத்திலிருந்து முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தை நடாத்துவதற்கு நிரந்தர அடிப்படையில் DG நியமிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. அதற்கு பதிலாக ஒரு ஆணைக்குழு உறுப்பினர் தொடர்ச்சியாக பகுதி நேர அடிப்படையில் DG ஐ உள்ளடக்கியதாக நியமிக்கப்பட்டிருந்தார். ஆணைக்குழுவின் ஆரம்பத்திலிருந்து, 03 ஆணைக்குழு உறுப்பினர்கள் ஆணைக்குழுவின் பதில் DG ஆகப் பணியாற்றினர். எனவே, சட்டத்தின் பிரகாரம் DG இன் பொறுப்புக்களை நிறைவேற்றுவது பயனுள்ள வகையில் சாத்தியமில்லை. | பணிப்பாளர் நாயகத்திற்காகச் செயற்படும் நபர், CPCEC சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறு பணிப்பாளர் நாயகத்தின் வகிபங்கை ஏற்றுக்கொள்கிறார். CPCEC சட்டத்தின் பிரகாரம் அந்த இயலளவில் செயற்படும் நபர் தலைவரால் நியமிக்கப்படுகிறார். இத்தகைய விசேட பொருளாதார வலயங்களை முகாமை செய்வதில் பொருத்தமான அனுபவமுள்ள நிரந்தர DG ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது, விதிமுறைகள் மற்றும் அனைத்து துணை விடயங்களும் நடைமுறையில் இருக்கும் போது, அத்தகைய ஆட்சேர்ப்பு மிகவும் விலையுயர்ந்த கருத்தாகும். | முகாமைத்துவத்தையும் நிர்வாகத்தையும் திறம்பட நடாத்துவதற்கு பணிப்பாளர் நாயகம் (DG) பதவிநிலை நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும். |

### 3.3.2 வெற்றிட பதவிநிலைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்விற்கு வழங்கப்பட்ட நிறுவன கட்டமைப்பின் பிரகாரம், கணக்காய்வு திகதியான 2024 சனவரி 09 இல் உள்ளவாறு பணிப்பாளர் தொழில்நுட்பம் மற்றும் பரிமாற்றம் மற்றும் மனித வள முகாமையாளர் வெற்றிடமாக உள்ளனர். | தேவை ஏற்படும் போது ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது. | வெற்றிட பதவிநிலைகள் விரைவில் நிரப்பப்பட வேண்டும். |

### 3.4 வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதன் செயற்திறன்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வெளிநாட்டு நேரடி முதலீடு பெரும்பாலும் பொருளாதாரத்தில் சாதகமான தாக்கத்தை கொண்டுள்ள தொழில்நுட்பம், அறிவு, புதுமை மற்றும் வேலைகளை கொண்டுவருவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. வேலைகளை கொண்டு வருவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனினும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்காக கொழும்பு துறைமுக நகரம் எதிர்கொள்ளும் அபாயங்கள் மற்றும் சவால்களை இனங்காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த எந்தவொரு ஆய்வும், அந்த சவால்களை சமாளிப்பதற்கான தணிப்பு உத்திகள் மற்றும் அந்த சவால்களை சமாளிப்பதற்கு அந்தந்த அதிகாரிகளுடன் பயனுள்ள உரையாடல்கள் வழங்கப்படவில்லை. | இது கோரப்பட்டதற்கான எந்தப் பதிவும் எங்களிடம் இல்லை. எனினும், அலுவலகத்தில் செலவிட்ட நேரத்தில் சந்தை மூலோபாயம் கலந்துரையாடப்பட்டதுடன் எழுப்பப்பட்ட அனைத்து கவலைகளும் தீர்க்கப்பட்டன. தற்போது நிலவும் பொருளாதார நிலைமை மற்றும் பல்வேறு ஒழுங்குமுறைகள் தொடர்பில் கோரிய தெளிவு காரணமாக முதலீட்டாளர்கள் கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடு செய்வதிலிருந்து பின்வாங்கியுள்ளமை தெளிவுபடுத்தப்பட்டது. | வெளிநாட்டு நேரடி முதலீட்டில் உள்ள வரம்புகள் மற்றும் சவால்கள் குறித்து ஆணைக்குழு சிறந்த விழிப்புணர்வை கொண்டிருக்க வேண்டும். |

### 3.5 சுற்றாடல் பிரச்சனைகள்

### 3.5.1 பெய்ரா ஏரியின் அடைப்பில் சுற்றாடல் பாதிப்பு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முத்தரப்பு உடன்படிக்கையின் 03 ஆம் பட்டியலின் 3.6 ஆம் உட்பிரிவின் பிரகாரம், பெய்ரா ஏரியின் வெளியேற்றத்திற்கு தடையாக இருக்கலாம். எனினும், தண்ணீர் தேங்குவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புக்களுக்கு உடன்படிக்கை மூலம் பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, பெய்ரா ஏரியில் இருந்து வெளியேறும் கூடுதல் கழிவுநீரால் | 3 ஆம் பட்டியலின் 3.6 ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நீரில் மூழ்கிய க்ரோய்ன் வரவிருக்கும் பெய்ரா ஏரி வெளியேற்றத்தை நிவர்த்தி செய்வதற்கான ஒரே தீர்வு அல்ல. அதை இறுதி செய்வதற்கு விரிவான ஆய்வு தேவைப்படுகிறது. | கழிவு நீர் முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் பிரச்சனைகளுக்கு விரைவில் தீர்வு காண வேண்டும். |

துர்நாற்றம் வீசுவது அவதானிக்கப்பட்டது. அமைச்சு செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவின் செயற்திட்ட பணிப்பாளரால் வெளியிடப்பட்ட 2023 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம்

முத்தரப்பு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்ட கம்பனி நீரில் மூழ்கிய க்ரோன்ஸ் (submerged groans) ஐ வடிவமைத்து நிர்மாணிப்பதற்கு செயற்திட்ட கம்பனி பொறுப்பாக உள்ளதால் ஒரு விரிவான பகுப்பாய்வு செய்து பொருத்தமான பொறியியல் தீர்வை வழங்குமாறு செயற்திட்ட கம்பனியிடம் கோரப்பட்டிருந்தது. எனினும், போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காதமையும்
கணக்காய்வு திகதியான 2024 சனவரி 09 வரை பெய்ரா ஏரியின் வெளியேற்றத்திலிருந்து துர்நாற்றம் வீசுவதும் அவதானிக்கப்பட்டது.

மேலும், துறைமுக நகர கால்வாய் திறக்கப்பட்ட பின்னர், மிகவும் பொருத்தமான கட்டமைப்பைத் தீர்மானிப்பதற்கு அலை வடிவத்தையும் ஆய்வு செய்ய வேண்டும். இந்த உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது. அவர்களிடம் இருந்து மேலும் தெளிவு பெறலாம்.

மேலும், பெய்ரா ஏரியில் இருந்து வரும் தண்ணீரால் துர்நாற்றம் ஏற்படவில்லை, ஆனால் சைத்யா வீதிக்கு இணையாக அமைக்கப்பட்டுள்ள மழைநீர் பாதையில் இருந்து வெளியேறும் கழிவுநீரால் துர்நாற்றம் வீசுகிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டது.
இரண்டு அரசாங்க நிறுவனங்கள் தமது கழிவுநீரை மேற்கூறிய மழைநீர் பாதையுடன் நேரடியாக இணைத்துள்ளதாக சனாதிபதியின் தலைமை அதிகாரியின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இந்த கவலை தெரிவிக்கப்பட்டது.

எனவே, இந்த சட்டவிரோத கழிவுநீர் இணைப்புக்களை புயல் நீர் பாதைக்கு திருப்புவது கொழும்பு மாநகர சபையின் பொறுப்பாகும்.